# திருவேற்காடு நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை : திரு.V.இராமர், B.A., B.L.,

ந.க.எண்.787/2026/எப்1 நாள். 30.03.2026

**பொருள்:–** மனைப்பிரிவு – திருவேற்காடு நகராட்சி – சுந்தரசோழவரம் கிராமம், சர்வே எண்.33/3, 33/4 & 33/5–ல் 3600 ச.மீ பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

**பார்வை:–**
1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண்.CMDA/PP/LAYOUT–1/0354/2025, நாள்.05.02.2026.
2. குன்றத்தூர் சார்பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் மனுதாரர் தானமாக சாலை இடத்தினை பதிவு செய்த தான பத்திரம் எண்.1336/2026, நாள்.27.01.2026.

*******

**<u>உத்தரவு :–</u>**

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட சுந்தரசோழவரம் கிராமம், சர்வே எண்.33/3, 33/4 & 33/5–ல் 3600 ச.மீ நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வேண்டி Tmt.Sheela Jeyaraj என்பவரால் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி மனுதாரின் விண்ணப்பம் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 1–ல் காணும் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின் படி, சாலை இடத்தினை குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்வை 2–ல் கண்டுள்ளபடி Tmt.Sheela Jeyaraj என்பவர் பத்திர பதிவு செய்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தானமாக ஒப்படைத்துள்ளார்.

பார்வை 1–ல் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் உத்திரவில் மனைப்பிரிவிற்கு OL–PPD/LO/0023/2026. நாள்.05.02.2026–ல் திட்ட அனுமதி எண்.OL–02641 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டண விவரம் | தொகை ரூ | ரசீது எண்/ நாள் |
|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவு கட்டணம் | ரூ.100000/– | 0021598/ 27.03.2026 |
| 2. | ஆய்வு கட்டணம் | ரூ.5000/– | 0021599/ 27.03.2026 |
| 3. | சுற்றுசுவர் | ரூ.5000/– | 0021600/ 27.03.2026 |
| 4. | 5 வருட வைப்பு தொகை | ரூ.100000/– | 0021601/ 27.03.2026 |
| 5. | கொடி நாள் | ரூ.10000/– | 0021602/ 27.03.2026 |
| 6. | Lumpsum Amount | ரூ.30000/– | 0021603/ 27.03.2026 |
| 7. | மனை உட்பிரிவு கட்டணம் | ரூ.100000/– | 0021606/ 27.03.2026 |
| 8. | பாதாள சாக்கடை | ரூ.300000/– | 0021607/ 27.03.2026 |
| 9. | காலிமனை வரி | ரூ.202322/– | 0021580/ 27.03.2026 |

## நிபந்தனைகள்

1 சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அனுமதி எண். OL-02641, நாள்.05.02.2026-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும்.

2 இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.

3 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

4 மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புலஎண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ளவேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பொறுப்பேற்காது.

5 தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்

6 நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022-ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிககாலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/ மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும்.

எனவே, மேற்கண்ட இடத்தில் **Tmt.Sheela Jeyaraj** என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மேற்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

30/3/26

**ஆணையாளர்**
**திருவேற்காடு நகராட்சி**

30/3/26

<u>பெறுநர்:-</u>

Tmt.Sheela Jeyaraj,
No.25/8, Karpagammbal Nagar,
2nd Main Road, 3rd Cross Street,
Thiruverkadu, Ayappakkam,Chennai-600077.

**<u>நகல் பணிந்தனுப்படுகிறது:-</u>**

உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை.